**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.93/2013**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.3**ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சின்னராஜ் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.3 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 21.06.2006ம் வாதியின் முகவர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவண சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும், 22.07.2022ம் நான் நந்தக்குமாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் **பி.வா.சா.ஆ.4** ஆகவும் 28.06.2025ம் தேதியிட்ட எனது பெயரிலும் என்னிடம் கிரையம் பெற்ற நந்தக்குமார் உள்ளீட்டோர் மீதும் உள்ள தாவா சொத்தின் பட்டா எண்.4312 இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகவும், தாவா சொத்தில் எனது பெயரில் உள்ள கந்தாய ரசீதுகளின் எண்ணிக்கை 3 அசல் **பி.வா.சா–ஆ.6** ஆகவும், 18.06.2007ம் தேதியிட்ட தாவா சொத்தில் எனது அனுபவத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அனுபவச்சான்று அசல் **பி.வா.சா.ஆ.7** ஆகவும், 19.05.2010ம் தேதியிட்ட தாவா சொத்தில் எனது அனுபவத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அனுபவச்சான்று அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகவும், 06.03.2026ம் தேதியிட்ட தாவா சொத்தை என்னிடம் கிரையம் பெற்ற நந்தக்குமார் பெயரில் உள்ள தனி பட்டா, அதன் பட்டா

எண்.5579 இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தள்ளுபடியாக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.17 09:58:50 +0530

District Munsif